பதிவு எண்—M5720. வெள்ளிக்கிழமை 3 குருகுலத்தாள்

முல்லைக்கொடி

கிழமை வெளியீடு – சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

5–கிளை குருகுலம், மாம்பாக்கம்; விசய, ஆனி; 3—7—53 தனி 40

குருகுலத்தின் குறிக்கோள் :

பொதுமறை விளக்கம்—திருவள்ளுவர் தெரிவிப்பது

தகுதிப் பெருக்கத்துக்குத் துணை

'நல்லோர்' யார் என்று அறிந்து கொள்வதற்கு ஒரே அடையாளம் கூறினால், அவர் தம் கடமைகளைச் சரியாகச் செய்து கொண்டிருக்கிறாரா என்று தெரிவதுதான். கல்வி, அறிவு, திரு, என்பனவெல்லாம் இக் கடமைச் செய்கைக்குக் கருவிகளே!

கடமைப் பயிற்சிக்கு இல்வாழ்க்கை ஒரு பயிற்சி நிலையம்! உள்ளத்துறவடைந்த இல்வாழ்க்கையர்க்கே கடமைகளை நன்றாகச் செய்ய முடியும். உள்ளமும் சூழலும் அவர்க்கு வாய்ப்பாயுள்ளன.

ஐம்பெரு வேள்விகள் என்னும் ஐம்பெரும் கடமைகளில் விருந்தோம்புதல் தலைமையான கடமை! இல்வாழ்வினர்க்கு ஒரே கடமையாகக் கூறுங்கால், விருந்தோம்புதலே அக் கடமையாகும் என்பதையும், 'இலவாழ்வதெல்லாம் விருந்தோம்பி வேளாண்மை செய்தற் பொருட்டு' என வரும் ஆசிரியரின் மற்றொரு திருவாக்குத் தெரிவிக்கின்றது.

பயன் கருதாத நற் செய்கைகட்கெல்லாம் இயல்பாகவே பயன் உண்டாகின்றது. விருந்தோம்புதலால் பெரும்பயன் விளைதல் திண்ணம். அப் பெரும்பயன், வருகின்ற விருந்தினரது தகுதியின் அளவால் உண்டாவதேயல்லது, இடுகின்ற விருந்தின் அளவால் உண்டாவதன்று. இத்தெளிவு மக்களுக்கு இல்லாமையினாலேதான் தக்கோர் தகுதியாகப் போற்றப்படாமல், மக்களும் தகுதி பெறாமல் இருக்கின்றனர். நாடு அதனால் இழப்புறுகின்றது.

தக்கோர்க்கு நாம் இடுவது சிறிதேயானாலும் அவரது தகுதியின் மாட்சியால் அவர்க்கு அது பெரிதாகி அதனால் உண்டாகும் பயன் நமக்கும் இயல்பாகவே மிகப் பெரிதாய் விளைந்து விடும். "தான் சிறிதாயினும் தக்கார்கைப் பட்டக்கால் வான் சிறிதாப் போர்த்து விடும்" என்றார் நாலடியுடையாரும். நமக்குத் தகுதியும் மிகுதியாகும். நல் வாழ்க்கையில் நோக்கமுடையவர்க்கு இத் தகுதிப் பெருக்கமே மிக இன்றியமையாதது. தக்கோர்க்கு விருந்தோம்புதலால் அவர் துணை கிடைத்தலின், தானே இது பெருகி வரும்.

இனைத்துணைத் தென்பதொன்றில்லை, விருந்தின்
துணைத்துணை வேள்விப் பயன்.

வேள்விப் பயன்—விருந்தோம்பலால் உண்டாகும் பயன், இனைத்துணைத்து என்பது ஒன்றில்லை—இன்ன அளவுடையது என்பதொன்றில்லை; விருந்தின் துணைத் துணை—வருகின்ற விருந்தினரின் தகுதியளவே அதன் அளவாகும். வேள்வி—விரும்பிச் செய்கின்ற தொண்டு; 'வேளாண்மை செய்தல் வேள்வி' என்க. இல்வாழ்வினர்க்குரிய கடமைத் தொண்டுகளில் முதன்மையானது விருந்தோம்பலாதலின் அதனையே 'இல்வாழ்வின் வேள்வி' எனச் சிறப்பித்தற்கு 'வேள்வி' என்றார். ஓதுதல், எரியோம்புதல், படையல் ஈதல், முன்னோரை வழிபடல், விருந்தோம்பல் என்னும் ஐம்பெரு வேள்விகளில் ஒன்றாதலின் அப் பெயர் கூறினார் என்பதும் பொருந்தும்.

பயன் கருதாமற் செய்யப்படுவது வேள்வியாதலாலும், ஆயினும் பயன் இயல்பாகவே விளைதல் திண்ணமாதலாலும், அங்ஙனம் விளையும் பயன் இவ்வளவு என்னும் வரையறையில் அடங்குவதன்று என்றற்கு 'இனைத்துணைத்து என்பதொன்றில்லை' என்றார்.

"முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)
5-ம் ஆண்டுக் கையொப்பம்
(3-10-52 முதல்)

உள் நாடு	ரூ.	4	0	0
வெளி நாடு	ரூ.	6	0	0
தனித் தாள்		0	1	0
ஆயுள்—				
கையொப்பம்	ரூ.	100	0	0

விற்பனையாளர்கள், தேவைக்கு முன்பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா."
—புறநானூறு.

இலை	விசய, ஆனி,	தளிர்
5	3-7-53 வெள்ளி	40

திருக்கழுக் குன்றத் திருமுறைப் பெரு விழா

சங்காலத்திற்குப் பின் தமிழ் நாட்டின் பழம் பெரும் சிறப்புகள் சிதையாதபடி காத்து, அதனைத் திருவருள் நெறியிற் சிறப்பாகச் செலுத்தியவை திருமுறைகள் எனலாம். திரு நாலாயிரத்துக்கும் இதிற் பங்குண்டு

தென்னாட்டு நாகரிகம் திருக்கோயில் நாகரிகம். அதற்கு அடையாளமாகவே சென்னை அரசாங்க இலச்சினையில் திருக்கோபுரம் இடம் பெற்றிருக்கின்றது.

இவ்வகையில் இந்நாட்டு நாகரிகத்தை வளர்த்தவைகள் திருமுறைகளே. அவற்றின் பாடல்களைப் பெற்ற திருக்கோயில்கள் தென்னாட்டில் நூற்றுக்கணக்கில் இருக்கின்றன.

தமிழ் நலமும், இசைச் சிறப்பும், உருக்க உணர்வும், உண்மைப் போக்கும், அருட் பெருக்கும் உடைய திருமுறை ஆசிரியர்களுள் சிறந்தவர்கள் நால்வர் பெருமக்கள். சமய குரவர்கள் என்று அவர்கள் பாராட்டப் படுகிறார்கள்.

நால்வர்பாடலும் பெற்ற திருப்பதிகள் மிச்சிலவே. அவற்றுள் ஒன்று நம் திருக்கழுக் குன்றம்.

அது சான்றோர் நாட்டில், சென்னைத் தலை நகருக்கு அண்மையில், அழகும், அமைதியும், அருளும் செறிந்த மலைப்பதியாய்த் திகழ்கின்றது.

உலகியல் நலங்களையும் அருளியல் சிறப்புகளையும் ஒருங்கே தரவல்ல அப்பதியில் ஆண்டவன் கோயில் கொண்டுள்ள மலையினை வேதமலை என்று வழங்குகின்றனர். அருணகிரியார் அதனைத் 'தமிழ் வேத வெற்பு' என்று குறிப்பிடுகிறார். அதோடு "கடலொலியதான தமிழ் மறைகள் ஓதும் கதலிவனம்" என்றும் அதனைச் சிறப்பிக்கிறார்.

ஆகவே, தெய்வத் திருமுறைகளுக்குத் திருவிழா எடுக்கத் திருக்கழுக்குன்றத்தினும் சிறந்த பொருத்தமான இடம் வேறு இல்லை என்று தெரிகிறது.

ஞானத்தில் ஞானம் என்னும் முடிந்த பரிபக்குவ நிலையை எய்தி, 'அறிவாற் சிவனே' ஆகிய ஆளுடைய அடிகள் என்னும் மாணிக்கவாசகர் அரு[illegible] பெற்று, ஆண்டவ[illegible] பெற்ற திருவடிகளை (ஞானத்தை) நாமெல்லாம் உய்ய இறக்கி (பதித்து) வைத்த இடம் திருக்கழுக் குன்றம். அதனை அவரே தம் பாடலில் குறிப்பிட்டிருக்கிறார். எனவே, அருள் ஞானப் பெரு நூல்களுக்கு அவர் நாளில் அங்கே விழாச் செய்வது எவ்வளவு பொருத்தம்! சிறப்பு! பயன்!

இவற்றைத் தம் ஆசிரியர் வழி உணர்ந்த சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தார் ஆண்டு தோறும் ஆயிரக் கணக்கான அடியார் புடைசூழ ஆனி மகத்தில் திருக்கழுக்குன்றத்தில் மலைவலமாகத் திருமுறைத் திருவிழாவைப் பெருவிழாவாகச் செய்கின்றனர்.

இவ்வாண்டு அவ்விழா ஆனி 28, 29, 30, (ஜூலை 12, 13, 14,) நாட்களில் சிறப்புற நடை பெற இருக்கின்றது.

திருச்சிற்றம்பலமாகிய சிதம்பரத்திலிருந்து திருமுறைகள் கண்டெடுக்கப்பட்டன என்று வரலாறு இருப்பதை ஒட்டி, வட திருச்சிற்றம்பலம் என அருணகிரியார் குறித்துள்ள மாம்பாக்கம் குரு தலத்திலிருந்து (மதுராந்தகத்தை அடுத்துள்ளது) ஆனி 29உ (10-7-53) வெள்ளிக் கிழமை பிற்பகல் சைவப்பெரியார் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் தலைமையில் பிள்ளையார், மாணிக்க வாசகர் திருவுருவங்களுடன் திருமுறைகளை யானை மேல் ஏற்றிக் கொண்டு மதுராந்தகம் வழியாகக் கருங்குழியை அடைந்து அங்கே இரவு தங்கி மறு நாள் காலை புறப்பட்டு வல்லிபுரம் வழியாக வழுவத்தூர் வந்து, பகல் தங்கி, மாலையில் திருக்கழுக் குன்றம் சேரத் திட்டமிட்டிருக்[illegible]கள்.

([illegible]ர்ச்சி 8-ம் பக்கம்)

AUG 1953

அருள் துறை

* நெஞ்சு விடு தூது *

(முத்துசாமி)

கோடி:

"இருமுச்......துவசன்"
(73-74)

ஆறு சமயமும் கடந்து தனக்கு ஒப்பல்லாது விளங்கி சுமை துன்பம் இவற்றை நீக்கியருளும் கொள்கை யென்னும் கொடியுடையோன்.

இறைவனுக்கு யானை கூறிய பின் கொடி கூறுகிறார். கொடி பிடிப்பது, தான் இன்ன கொள்கையைக் கடைப் பிடிப்பவன் என்று தெரிவிப்பதற்காகும். நம் குருகுலத்துக்கும் கொடியுண்டு. அக்கொடியில் காளைமாடு பொறித்திருக்கும். காளையைத் தான் ரிஷபம் என்றும் விடையென்றும் கூறுவது. காளைமாடு ஆனினத்தில் உயர்ந்தது. அது உருக்கத்துக்கும் பலன் கருதாத பணிக்கும் எடுத்துக்காட்டாய் விளங்குவது மாடு கிடைத்ததைத் தின்று எப்பயனையும் எதிர்பாராமல், உழைப்புக்குத் தக்க கூலி கொடு என்றும் கேட்காமல், தீனி போடாவிட்டாலும் தானே தேடியலைந்து மேய்ந்து விட்டு வந்து நன்றாய் உழைக்கும் மாட்டுக்கு இணையாக உழைக்க வல்லது வேறொன்றல்லை; உருக்கத்துக்கும் அப்படியே. 'கற்றாவின் மனம் போல உருகி' என்று உருக்கத்துக்கு அதனை எடுத்துக் காட்டாகக் கூறுவர். குரு குலத்தார் இறைவனை நோக்கி உருகிக் கொண்டு, பலன் எதிர்பாராது பணி செய்பவர் என்ற கருத்தையுணர்த்துவது நம் குருகுலத்தின் 'ரிஷபக் கொடி'.

நம் சைவசமயம், அறுசமயம் என்று சொல்கிறார்களே, அவற்றிற்கு அப்பாற்பட்டது. அறு சமயக்கொள்கைகள் யாவையும் உண்மையே யாயினும் நிறைவடைந்த உண்மையல்ல. அவை குருடர்கள் யானையைத் தடவிப் பார்த்துவிட்டு அவரவர் தெரிந்து கொண்டதை மட்டும் கூறுவனதயொக்கும். சைவம் கண்ணுடைய ஒருவன் யானையைக் கண்டு கூறியதை யொக்கும்.

அறுசமயங்கள் காட்டும் நெறிகள், பின்பற்றுவதற்குச் சுமைபோல இருக்கும்; துன்பத்தையும் அறவே நீக்கி நிலையான இன்பந்தா வல்லனவல்ல. ஆறு சமயங் கடந்த சைவ சமயம் காட்டும் நெறி, சுமையில்லாததாய், நிலையான இன்பந்தா வல்லதாயிருப்பது அவ்வித நெறியைப் பின்பற்றி வருபவர்க்கு மலச் சுமை நீக்கி நிலையான இன்பங் கொடுக்கும் கொள்கையுடையவன் இறைவன். அக்கொள்கையே ஈண்டு இறைவனுக்குக் கொடியெனக் கூறப்பட்டது.

முரசு:

"கமையொன்றித்......நெடு
முரசோன்" (74-77)

தம்மை மறந்து ஞானமாகிய தழலொளியை, உள்ளே இருத்தி இம்மை மறுமைப் போகத்தை மறந்து முறையே மூச்சை ஓடாது நிறுத்தி வானத்து வாயுவையும் பொருந்த வைத்துச் செய்யும் தவப் பழக்கத்தால் பெறும் ஞான ஒளியில் என்றும் ஒரு தன்மையாயிருக்கும் இன்பத்தைக் கொடுக்கும் அருளே நின்று முழங்கும் நெடு முரசோன்.

தம்மை மறப்பதற்குக் கடமைகளை உணர்ந்து அவற்றில் ஈடுபடுதலே சிறந்த வழி. கருமமே கண்ணாயினார் பசி நோக்கார், கண் துஞ்சார் என்பது போன்ற வழக்கு இதனை வலியுறுத்தும்.

இம்மை யென்பது இவ்வுலக போகங்கள். மறுமை யென்பது பின் வரவிருக்கும் நிலையிலுள்ள போகங்கள். இரண்டையும் நீக்கி விட்டு அம்மை யென்னும் வீட்டின்பத்தை நாடவேண்டும்.

உடம்பிலுள்ள பிராண சக்தியும் கெடாதவாறு பார்த்துக் கொண்டு மேலும் அண்டத்திலுள்ள பிராண சக்தியை, இழுத்து நிறுத்தி, அதிகப்படுத்திக்கொள்ள வேண்டும். இதனால் எழும் சோதியிலே அருள் ஒளி பிரகாசிக்கும். அது, என்றும் ஒரு தன்மையானது; இன்பத்தைக் கொடுப்பது. அவ்வருளே இறைவனுக்கு முரசு.

ஆணை:

"அன்றியும்மாலும்...ஆணையான்"

(78-79)

அல்லாமலும் பிரமனும் திருமாலும் படைத்துக் காத்தஉலகங்களெல்லாம் நிறைந்து நிறகவல்லதும், பிரமன், மால், படைத்த உலகங்களுக்கு அப்பாலும், எப்பாலும் மேலுலகும், உலகங்களால் உணரவொண்ணா ஊராகிய முத்தியிடமும், விளங்கி நடக்க வல்லதுமான அழகான, கருணையென்னும் ஆணையான்.

தசாங்கத்தில் இறுதியானது இது. மலை, ஆறு, நாடு, ஊர், தார், குதிரை, யானை, கொடி முரசு என்னும் ஒன்பது பொருள்களோடு வீறுகொண்டு வீற்றிருக்கும் ஒரு தலைவன் தனது ஆணையை எங்கும் செலுத்திக் கொண்டிருப்பானன்றோ? ஆணை சொல்லாத தலைவனைத் தலைவன் என்று கூறி என்ன பயன்? ஆகவே ஆணை பத்தாவது அங்கம் என்க.

ஒரு அரசனது ஆணை அவனது நாட்டில் மட்டுமே செல்லும்; வேறு நாட்டில் செல்லாது. எல்லா உலகங்களுக்கும் தலைவனாகிய ஆண்டவனது ஆணை எல்லா உலகங்களிலும் செல்லும் என்று கூறவும் வேண்டுமோ? நம்மால் உணரக்கூடிய இடம் மட்டுமேயல்லாமல் நம்மால் உணர முடியாத அதாவது நம் உணர்ச்சிக்கும் எட்டாத இடமும் இருக்கலாமன்றோ? அங்கெல்லாம் கூடச் செல்லுமெனின் அவன் ஆணை சொல்லாத இடமே இல்லையென்க. ஒரு அரசனுடைய ஆணை கடுமையாகவும் தாங்க அரியதாகவும் இருக்கலாம். ஆனால் இறைவன் ஆணை அப்படியன்று கருணையே வடிவமானது அழகானது!

நெஞ்சே, நீ சென்று தூதுரைக்க வேண்டிய தலைவன் இவ்விதமாக பத்து அங்கங்களோடு கூடியவன் என்று கூறியவாறும்.

விநாயகர்

(சோமசுந்தரம்)

(முன் தொடர்ச்சி)

ஓம் என்பதில் அ, உ, ம் என மூன்று பிரிவுகள் உண்டு. இப்போது சமய நிலையில் பேசாது மொழி நிலையில் பேசுகிறேன். அ—ஆதி எழுத்து, சாத்துவிக எழுத்தாதலின் இனிமை நிலையை உணர்த்துகிறது. உ—இராஜச எழுத்தாக மனிதரில் மனிதர் நிலையை உணர்த்துகிறது. ம்—உலகோடு ஒட்டி நடக்கும் தாமசத்தைக் காட்டுறகிது. அ,உ,ம் சேர்ந்தால் 'ஓம்' ஆகும்.

நான் தவறாக நடந்தால் என் வீட்டில் உள்ளவர்களோ, நீங்களோ என்னைத் திருத்தலாம். நமக்கு நாமே ஒருவர்க்கொருவர் திருத்திக்கொள்ள வேண்டும். இந்த வகையில் தெய்வமும் நம்மை ஒழுங்குபடுத்திக்கொண்டிருக்கிறது என்ற எண்ணம் உத்தமருக்கு இருக்கவேண்டும். இம் முறையில் வழிபாடு நடக்க வேண்டும்.

மான், கிளி முதலிய அழகு வாய்ந்தவைஉலகில் இருக்கவிநாயகருக்குயானைமுகம் கற்பித்தது ஏன்? யானை மரக்கறி உணவு உண்பது, சாத்துவிக மானது, அறிவுள்ளது, கண்ணியமானது. காட்டு விலங்குகளில் தலைமையாக இருப்பது சிங்கம். நாட்டு விலங்குகளில் தலைமையாக இருப்பது எ[illegible]. இந்த இரண்டுக்கும் தலைமையாக இருப்பது யானை. ஒருவர் வீட்டுக்கு வந்தால் யானைபோல வந்தார் என்கிறோம். உண்மையில் அவர் யானையா? அவர் கண்ணியத்தைக் காட்ட யானை என்கிறோம். வீரர் வந்தார் என்பதற்குச் சிங்கம் வந்தது என்பர். சிங்கம் என்று சொல்லுகிறவர் கருத்தில் அதன் உண்மையை உணர வேண்டுமே தவிர நம் கருத்தில் சிங்கம் என்றே உருவில் எடுத்துக் கொள்ளக் கூடாது. அம்பிகை பெண்யானை உருக்கொள்ள அப்பன் ஆண் யானையாக வந்தான் என்பது இருவரும் கண்ணிய வடிவத்தில் இருந்தனர் என்ற கருத்தைக் காட்டுகிறது. ஆகவே விநாயகர் யானைத் தலையை உடையவர் என்றால் அவர் கண்ணியமானவர் என்பது தெரிகிறது.

யாரையாவது பார்த்சால் முகலில் முகத்தையே பார்க்கிறோம். தெய்வத்தையும் இப்படித்தானே பார்க்கவேண்டும். விநாயகரை இப்படி பார்க்கும்போது முதலில் தோன்றும் அவர்முகம் 'நீகண்ணியமாக இரு' என்பதைக காட்டுகிறது. ஆகவே விநாயகர் உருவம், முதலில் கண்ணியமாக இருந்தால் மாற்ற நலங்களைப் பெற்று இனிமைநிலைக்கு உயருவோம்என்னும் கொள்கையை வலியுறுத்துகிறது. கண்ணியத்தில் இருந்தால் தான் ஆட்சித் தன்மைவரும்.

நல்லொழுக்கத்தை உண்டாக்குதல் வேந்தர் கடமை என இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்இருந்த பெரியார் முடித்துக் கூறினார். நல்லொழுக்கத்தால் தான் இனிமைவளரும். உலகப் போக்கில் கண்ணியமாக இருக்க இனிமைத்தன்மை வந்துசேரும். இது வளர்ச்சிக்கு உரிய ஆரம்பம். சம்பந்தர் ஆண்டவனைப் பார்த்து 'பெருந்தகை இருந்ததே'

என்றார். வேறு எவ்வளவோ கவர்ச்சி தரும் அழகுகள் அவரிடத்தில் இருக்க 'பெருந்தகை' என்று கூறியது ஏனெனின், அப்பெருந்தன்மையில் மற்றவை அடங்கியுள்ளன.

நாம் கண்ணியமாய் இருந்தால் மற்றவர்களும் கவலை இல்லாமல் இருப்பர். நம்நிலையில் நாம் சரியாக இல்லாததனால்தான் மற்றவர்கள் எதை எதையோ செய்ய வேண்டியிருக்கிறது. அவர்கள் செய்யப்போகிற இயக்கம் நமக்கு உதவுகிற முறையில் இருக்கும் என்றும், வளர்ச்சியைத் தரும் முறை என்றும் பாராட்டுவேன். கஷ்டம் வந்தால் கிணற்றில் நாம் கூடத்தூக்கிப்போடுகிறோம். உபயோகப்படாதது எதற்கு என கோபமாகவும் வீசி எறியப்பார்க்கிறோம். இதுபோல அவர்களும் உபயோகப்படாதது எதற்கு என்று எதையே செய்யப் போகிறார்கள். அதை உபயோகித்துக் கொள்ளும் நிலையில் நாம் இருக்கவேண்டும். கதைகளை அப்புறப்படுத்தி நல்ல கருத்துக்களினால் சமயத்தைத் தூய்மையாக்கி இனிமையாளராக மாற வேண்டியது நம் கடமை

அவர்மேல் குறை இல்லை. அவர் கெட்டிக்ககரர்; உருவாக வேலை செய்கிறவர். அவர் மனம் வருந்துகிற நிலையில் அருள்நெறி அன்பர்கள் ஏன் இருக்க வேண்டும்? குறை நம் மேல் தான் இருக்கிறது. ஆகவே எனக்கு உள்ள முதல் வேலை அருள் நெறியாளரிடத்தில் தான் இருக்கிறது. அவர்களே எனக்கு எதிரிகளாக இருக்கிறார்கள். காரணம் அவர்கள் சரியாக இல்லை. எப்படியோ சில்லரைக் கதைகளைப் புகுத்தி விளக்கம் இன்றி உண்மை பாவனையும் இன்றி மக்கள் சமூகத்தைப் பாழாக்குவதனால் நான் செய்கிற வேலை அவர்களிடத்தில்தான் இருக்கிறது. இதை வேறாக நினைக்காமல், ஆக்கமான, வாழ்க்கைக்குப் பயன் படும் வகையில் கொள்வார்களாக. அருள் நெறி அன்பர்கள் நல்ல நெறியில் நிற்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகின்றேன். இப்படி நாம் நின்றால் மற்றவர் மனம் வருந்தி எதையும் செய்ய வேண்டிய அவசியம் ஏற்படாது. முதலிலிருந்தே நாம் சரியாக வேலை செய்து வந்திருந்தால் இப்படிப்பட்ட வேலை செய்யக் கூடிய நிலை வந்திருக்குமோ என்பதை எண்ணிப்பார்க்கவேண்டும். செய்ய வேண்டியதைச் செய்யாது குழப்பி விட்டிருக்கும் இந்நிலைமையை மற்றவர்செயல் முகமாகக் காட்டினால் நாம் அவர்களுக்கு நன்றி செலுத்துவதா அல்லது வேறாக நினைப்பதா?

உயர்ந்த வகையில் மன்பதையை உயர்த்தும் வீரர் நாடு இருந்தவில்லையே என்ற கவலையினால் இத்தகைய செயல்களைச் செய்ய நேருகிறது. அவர்களுக்கு அக் கவலை வாராதபடி செய்ய வேண்டும். உருவாகச் செயல் செய்பவரைக் கெடுத்து விடக்கூடாது. அவருக்கு ஆதரவு கொடுக்க வேண்டியது கட்டாயமாதலின் நம் நிலையில் நாம் சரியாக நடந்துகொள்ளப் பழக வேண்டும். ஆகவே செயல்முகமாகக், கட்டுப்பாடாக, நடந்து அவரை மன மகிழ்ச்சியாக வைக்க வேண்டும்.

(இது, விநாயகர் திருஉருவ உடைப்பு இயக்கத்திற்கு முன் ஆசிரியர் அவர்கள் கோகலே மண்டபத்தில் 24-5-53ல் தெரிவித்த கருத்துக்களின் சுருக்கம்.)

திருக்குறள்-வாழ்க்கை மறை

(முன் தொடர்ச்சி)

இருமைவகை தெரிந்து கொள்வதைத் திருவள்ளுவர் முதன்மையாகக் கருதி இருக்கிறார் "இரு வேறுலகத்தியற்கை திருவேறு தெள்ளியராதலும் வேறு" என்றார். திருவாதல் எளிது; தெள்ளியராதல் கடினம். தெளிவு பெறுதல் ஞானம் பெறுதலாகும். பலபிறவிகளில் பண்ணியாற்றினால் அத்தெளிவு வரும். புலனடக்கம் முதலியவை அதற்குத் துணை. தனக்குவமை இல்லாதான் தாளைத் தேடுபவர்க்குப் புலனடக்கம் தானே வரும்.

இனி, நீத்தார் எப்படி இருப்பார் என்பதற்கு அறன் வலியைக் காட்டினார். அறம் மிக்க வலிவுள்ளது. ஊழுக்கும் வலிவுண்டு. "ஊழிற் பெருவலி யாவுள" என்று அதன் வலியைத் தெரிவித்தார். ஆனால் அறன் வலி ஊழையும் மாற்றவல்லது. அறவழி நடவாதவர்க்கே ஊழினது வலி பெரிதாக இருக்கும் என்னும் கருத்துடன் ஊழை அறத்துப்பாலின் இறுதியில் வைத்தார். மாசில்லாமையே அறன்வலியாகும். எனவே மாசிலனாதலே பெரிய வலிவைப் பெறும் வழி. திருக்குறளுக்கு 'அறம்' என்றே பெயர். ஏனெனின் அஃது அறன் வலியை அறிவுறுத்துகிறது. பெரியோர்களிடமிருந்து நாம் அடைவது அறம். அவர்கள் நமக்குக் கொடுக்கும் சொத்து அது. தூய்மையடைவதுதான் அது. "அழுக்காறவாவெகுளி யின்னாச்சொல் நான்கும் இழுக்காவியன்றதறம்" என்றார். அழுக்காறு முதலிய இன்மையே தூய்மை

யாகும். தூய்மை இருந்தால் நமக்கு வன்மை உண்டாகிறது. இது முதல்தரமான வலிவாகும். இதனை உடையவர் பிறர்க்காகவே வாழ்வர். அவர்கள் இருமையும் தெரிந்து வாழ்வர். தெரியாதவர் ஈண்டுத்தொண்டு செய்ய முடியாதவர் என்பதனல், இயக்கத் தலைவர்கள் இதனை அறிந்தவர்களா என்பதைப் பார்க்க வேண்டும். தெரியாதவர்கள், பிறர்க்காகவோ அல்லது எல்லா உயிர்க்குமோ செந்தண்மை பூண்டு வாழ முடியாது. சிலர் மக்களுக்குத் தொண்டு செய்து விலங்குகளுக்குச் செய்ய மாட்டார்கள்.

மேற் கூறியவற்ருல், திருக்குறள் நம் வாழ்க்கையோடு தொடர்புடையதென்றும், அதன் கருத்தை எடுத்துக்காட்டும் பாயிரம், நம் கவலை தீர வேண்டுமானல் தனக்குவமை இல்லாதான் தாளைச் சேர வேண்டுமென்பதையும், நல்லவரின் நடத்தைக்கு அருள் தானே கனிந்து மழை பெய்விக்குமென்பதையும், நல்லோர் இருமை வகை தெரிந்து பிறர்க்காகவே தொண்டு செய்து எல்லா உயிர்களுக்கும் செந்தண்மை பூண்டொழுகுவார் என்பதையும்; அகத்தூய்மையே அறம், அது எல்லாவற்றினும் மிக்க வலிவுடையது என்பதையும், தெரிவிக்கிறதென்றும் அறிகிருேம். திருக்குறளில் உள்ள மற்ற உண்மைகள் எல்லாம் இவற்றிற்குத் துணைகளே. இவற்றிற்கு உயர்ந்த வேறு கருத்துக்கள் அங்கு இல்லை. இந்த முடிவு தவறு என்று யாராவது தெரிவித்தால் நான் என்னைத் திருத்திக் கொள்கிறேன். இல்லையானல் இம் முடிவை ஏற்றுக் கொள்ளுங்கள். இந்தத் தீர்ந்த முடிவு நம்மைப் உயர்த்தும் என்று தெரிந்து கொள்ளாவிட்டால், அதன் வழி உலகைச் செலுத்தாவிட்டால், எவ்வளவு உயர்ந்த நிலையில் இருந்தாலும் பயனில்லை. உலகம் உய்வு பெற வேண்டுமானல் இந்தப் போக்கில் போக வேண்டும். இதுவன்றி வேறு வழியே இல்லை"

(இஃது மயிலைத் திருவள்ளுவர் கோவிலில் 28-5-53ல் நடந்த ஆண்டு விழாவின் போது ஆசிரியர் அவர்கள் ஆற்றிய விரிவுரை.)

சாதி வேற்றுமை

(நாராயணசாமி)

மனித சமூகத்தில் நெடுங் காலப் பழக்கமாக வாழ்க்கையில் பின்பற்றப்படுவது எதுவும் எளிதில் மாறக்கூடியதல்ல. மாற்ற முயற்சித்தாலும் அப் பழக்கத்தை அனுசரிக்கும் அனுசரணையாளர்களின் அறைகூவலையும் ஏற்றுத் தக்க வழியில் துணை கொண்டு இரு மருங்கும் ஏற்றுக்கொள்ளும் முறையில் தீர்ப்பளிக்கப்பட்டாலொழிய அம் மாற்றல் நிகழ்ச்சி சிறந்த முறையில் வெற்றியளிக்கும் என்று கூறுவதற்கில்லை.

இன்றைய மனித இனத்தை இடுக்கணிலாழ்த்தி, எங்கணும் சாதி, மத, நிறவேற்றுமைப் போட்டங்கள் மலிய, சொல்லொணுத்துயர் நிறைந்த தொல்லைகளை விளைவித்து வருவது வேற்றுமை ஒன்றே. எங்கணும் உயர்வு தாழ்வுப்போராட்டங்கள் பெருகி விட்டன. உண்மை ஒருபுறம் நிற்க, உரிமை விலை கூறப்பட்டு, தக்கார், தகவிலர் என்று ஆராயும் நோக்கைவிடுத்து தகாரும் தக்கவர் என்றெண்ணுவது வேற்றுமை மனப்பான்மை காரணத்தினலன்றே? மனப் பான்மை என்பது யாவர்க்கும் ஒரே விதம் அமைவதில்லையாதலின் அவரவர்க்கெட்டும் அறிவைத் கொண்டு ஆய்ந்து முடிவு கூறுகின்றனர். அவற்றில் சிறிதேனும் தன்னலம் கலந்திருக்குமாயின் நடுநிலை பிறழ ஏதுவுண்டு. தலையாய கருத்து என்று இன்றெடுக்கக் கொள்வது நாளை தகாத கருத்தெனத் தள்ளவும் கூடும். எனவே உலக நிலையில் காலத்துக்கேற்ற மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டு தான் வருகின்றன.

ஆனல் எக்காலத்தும் கற்ருேரால் ஏற்றுக்கொள்ளப்படாது சமூகத்தில் ஊடாடிக்கொண்டிருக்கும் இச் சாதி வேற்றுமை இனியும் நீடித்து வருகிறது.

(தொடர்ச்சி 8-ம் பக்கம்

PHONE 55034 TEL. ENKAYAM
கைத்தறி ஆடைகளில்
சிறந்தது எங்கள்
கிசான் டிரேட்மார்க்

பட்டாடைகளுக்கும்
நூலாடைகளுக்கும்
சிறந்த இடம்
கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்
53 கிடங்குதெரு சென்னை 1.

திருக்கழுக்குன்றத்தில் திருமுறை இன்னிசைப் பெருவிழா

(எட்டாவது ஆண்டு)

நிகழ்ச்சி நிரல்

10-7-53 வெள்ளிக்கிழமை: பிற்பகல் திருமுறைகளை யானைமேல் ஏற்றிக் கொண்டு வடதிருச்சிற்றம்பலத் (மாபபாக்கத்) திலிருந்து திருக்கழுக்குன்றத்துக்குப் புறப்பாடு. மாலை யதுராந்தகத்திலும் இரவு காங்குழியிலும் மண்டகப்படி.

11-7-53 சனிக்கிழமை: வழிப்பயணமும், இடையே வல்லிபுரம், வழுவத்தூர் முதலிய ஊர்களில் மண்டகப்படியும். மாலை திருக்கழுக்குன்றத்தில் வரவேற்பும், தாழக்கோவில் வழிபாடும், அம்மன் திருக்கோலக் காட்சியும்.

12-7-53 ஞாயிற்றுக்கிழமை: காலை 7 மணிக்குத் திருப்புகழ்மணி அவர்களின் திருப்படிவிழா; உச்சிக் கோவில் வழிபாடு.
மாலை 5 மணிக்குத் திரு. இளவழகனார் அவர்களுடன் மலைவலம்; சொக்கம்மை மலைச்சாரலில் தேனிப்பு. மலையடிவாரத்தில் நாகர்கோவில் திரு. ஆறுமுக நாவலரவர்கள் தனிச் சொற்பொழிவு.

13-7-53 திங்கட்கிழமை: திருமுறைப் பேரவை. மதுரைத் திருஞானசம்பந்தர் ஆதீனம் திருப்பெருந்திரு. சோமசுந்தர தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்களின் தலைமையில்:
நாகர்கோவில் திரு. கே. ஆறுமுக நாவலர்,
திருமுருக. கிருபானந்தவாரியார்,
திரு. பு. ர. சாமிநாதன் M. A., L. T.,
திருமதி. இராஜேஸ்வரி அம்மையார்,
முதலியோரின் அரிய சொற்பொழிவுகள்.

14-7-53 செவ்வாய்க்கிழமை: காலையில் மாம்பாக்கம் குருதலத்தின் பிள்ளையார், மாணிக்கவாசகர் திருவுருவங்களோடு, நால்வர் திருவுருவங்களுடன் யானை மேல் திருமுறைப் பெருவிழா. மருந்துமலைச் சாரலில் நூல் வெளியீடு. திருவடிக்கோவிலில் புதுவை திரு. அ. விநாயக முதலியார், திரு. சி. சங்கரலிங்கம்பிள்ளை, திரு. நடராசன், திரு. இரத்தினவேலர் முதலியோரின் திருமுறைப்பாராயணம். மாலையில் நால்வர் கோவில் வழிபாடு, மாணிக்க வாசகர் ஊசல்.

ஒவ்வொரு நாளும் இசையரங்குகள் உண்டு.
(விரிவு, நிகழ்ச்சிக் குறிப்பிற் காணலாம்.)

"காதல் செய் கோயில் கழுக்குன்று"
—சம்பந்தர்

"நாவலனைக் கழுக்குன்றம் அமர்ந்தான் தன்னைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே"
—அப்பர்

"வினைகள் தாம் பல நீங்கவே
சென்று சென்று தொழுமின்
தண்கழுக்குன்றமே"
—சுந்தரர்

"இலங்குகின்ற நின் சேவடிகள் இரண்டும் வைப்பிடம் இன்றியே
கலங்கினேன் கலங்காமலே வந்து காட்டினாய் கழுக்குன்றிலே"
—மாணிக்கவாசகர்

(6ம்-பக்கம் தொடர்ச்சி)

நடு நிலைக்கண் கொண்டு நோக்குமிடத்து இச் சாதி மனித சமூகத்தை எங்ஙனம் அவதிப் படுத்துகிறது என்பது புலனாகும். தொழில் பற்றி எழுந்ததிச் சாதி என்று எவரேனும் கூறினால் கால மாறுபாட்டை அனுசரித்துப் பழக்கவழக்கங்களை மாற்றிக் கொள்ளல் அறிவுடைமையன்றோ? ஒரு சிலரின் பிழைப்பு உரிமை ஒரு சிலரால் பறிக்கப்பட்டு, முறையின்றி அவர்களை மக்களினின்று வேறுபடுத்துவது எக்காலக் கொள்கைக்கும் ஏற்கமுடியாதது.

ஆண், பெண்; இட்டார்,இடாதார்; புலால் உண்போர், மறுத்தோர்;என்று தமிழ்ப் பெருமக்கள் சாதியை வகுத்துள்ளனர். இவை அறிவுக்குப் பொருத்தமானவைகளாக உள்ளன. ஆனால் இன்றுள்ள சாதி நிலை இயற்கையோடு ஒட்டியதாய் இல்லை. எனவே இன்றைய முறையை ஒழிக்கப் பலரும் முயன்று வருகின்றனர்.

மனிதன் மனிதனை மதிக்கவில்லையாயின்,'மனத்தை' அவன் உடையவனல்லன். சாதிவேறுபாட்டை அகற்ற முயல்பவனே மனித இனத்தைக் காப்பவன். காந்தியடிகள் சாதியை அகற்ற வழிகாட்டினார். இளைஞரின் மனநிலையும் இன்று அவர் வழியிற் செல்ல முந்துகிறது. இதனை அரசியலாரும், இயக்கத் தலைவர்களும், குடும்பத் தலைவர்களும் தடை செய்யாமல் பையப்பைய ஊக்கி நாட்டில் சாதி வேற்றுமையை அடியோடு ஒழிக்க உதவுவார்களாக.

(2-ம் பக்கம் தொடர்ச்சி)

இப் பெருவிழாவில் நிகழ்ச்சி நிரலில் குறித்தபடி பல அரிய சொற்பொழிவுகளும் இசையரங்குகளும் நடைபெறும்.

இவ் வருள்நூற் பெருவிழா ஆண்டுக் காண்டு திருவருளால் சிறப்புற்று வருகின்றது. இனியும் சிறப்புறப்; தென்னாட்டுப் பெருவிழாவாக மலரும். இதில் செந்தமிழ்ச் சிவநெறிச் சான்றோர், அறிஞர், கலைஞர், தொண்டர், செல்வர் அனைவரும் முன்வந்து ஈடுபட்டு இயன்றதைச் செய்து வருகின்றனர். மேலும் செய்து வரவேண்டும். அதனால் இந்நாடும், மொழியும், சமயமும், சிறக்கும். உலகமும் நல்ல உண்மைகளை உணர்ந்து வரும்.

—ந. ரா. ஆடலரசு.

நஞ்சன்கூடு பல்பொடி
பாக்டெரியாரின்

யுனைடெட் கெமிகல்ஸ்,
54; பந்தர்த் தெரு,:: சென்னை 1

குருகுல் - - - வெளியீடுகள்

1. ஒளி வழிபாடு
விலை அணா 6.

2. திருமூலர் அருள்மொழிகள்
விலை அணா 4.

3. தணிகைமலை அல்லது அமைதி
விலை அணா 6.

4. திருக்கழுக்குன்றப் பதிகம்
விலை அணா 2.

5. கருக் கலை
விலை அணா 4.

6. மூன்று உண்மைகள்
விலை அணா 3.

7. இராமலிங்க அடிகள் வரலாறும் திருவருட்பா ஆராய்ச்சியும்
விலை அணா 6.

8. முல்லைப்பாட்டு அகராதி
விலை அணா

9. தொல்காப்பியம் அகத் திணையியல் விளக்கம்
விலை ரூ 1.

10. ஆத்திசூடி - கருத்துரை
விலை 0-0-3.

கிடைக்கும் இடம்:

குருகுலம், மாம்பாக்கம்;
மதுராந்தகம், P. O., (S. R)

பதிப்பித்து அச்சிட்டு வெளியிடுவோர்; திரு. சு. பாலசுந்தரம், குருகுல அச்சகம், மாம்பாக்கம்; மதுராந்தகம் (அஞ்)